# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 391 /2017 |
| Deposition of witness | | PW- 1 /LW- 1 |
| Name | | திரு. ராஜப்பன் |
| Father's/Husband Name | | திரு.ராமு |
| Village | | வாட்டாக்குடி |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 65/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11h day of March 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு.அகிலன் Junior Assistant என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற தலைமை காவலர் 1990 வீரப்பிரகாஷ் என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது வாட்டாக்குடியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என் ஊரில் விநாயகர் சதுர்த்தி பிள்ளையார் ஊர்வலம் சம்பந்தமாக பிரச்சனை நடந்தது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(சாட்சி பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்ததால் பிறழ் சாட்சி என்று கருதி நீதிமன்ற கேள்வி கேட்கப்படுகிறது. )

சிவக்கொல்லையிலிருந்து மதுக்கூர் அவ்வையாண்டி குளத்தில் விதர்சனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததென்றால் சரியல்ல. 19.09.2010 பக்தர்களுடன் விநாயகர் ஊர்வலம் வந்தபோது மாலை 06.30 மணிக்கு எதிரிகள் வழிமறித்து என்னடா தேவடியா பயளுங்களா முஸ்லிம் ஏரியாவில் ஊர்வலம் நடத்த உங்களுக்கு திமிரா என்று கேட்டு அங்கு கிடந்த கல்லை எடுத்து வீசினார்கள் என்றால் சரியல்ல. மதநல்லிணக்கம் கெட்டுப்போகும் அளவிற்கு கலவரத்தை தூண்டி இந்து மதத்தை கேவலப்படுத்தி தாறுமாறாக திட்டி அடுத்த

வருடம் இந்த வழியாக வந்தால் வெட்டி கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. விநாயகர் ஊர்வலத்தில் அமைதியாக முடிக்கவேண்டும் என்று அவையாண்டிகுளத்தில் கரைத்து இரவு 09.00 மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார் தொடர்பாக 20.09.2010 காலை ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஓம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை